பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 81331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 18 (4-10-71) திங்கள் வெளியூர்: புரட்டாசி 19 (5-10-71) செவ்வாய் [இதழ்: 92

இலங்கை -- பர்மா அகதிகட்கு உதவி; தமிழக அரசு பரிசீலனை

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறி வந்தவர்களுக்கு வேலை அளிப்பதற்காக இராமநாதபுரம் -- கோவை -- நெல்லை மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில் மூன்று விசைத்தறி ஆலோசனை போர்டுகளை ஏற்படுத்துவது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

வெளியேறி வந்துள்ள அகதிகளைத் தங்கள் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் நிறுவனங்கட்கு நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டமும் அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

காமராசர் குற்றச்சாட்டின் குறிக்கோள்

தியாகிகளை இழிவுபடுத்தும் போக்கு

மாற்றுரை மதிக்கும் பண்பு யாருக்கு இல்லை?

'கொள்கையைக் கொள்கையால் எதிர்க்கும் திராணி உண்டா?'--- திருவண்ணுமலைப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் கருணுநிதி அறைகூவல்

திருவண்ணுமலை, அக். 4—

"கொள்கையை -- மாற்றுக் கொள்கையில் சந்திக்கத் திராணி இல்லாதவர்கள் -- அத்தகைய கொள்கைப் பலம் இல்லாதவர்கள் -- தி. மு. கழகத்தை எதிர்த்துப் பேசுவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் -- ஏதேதோ பேசி வருகிருர்கள் !

"காமராசர்கூட காந்தி பிறந்த நாள் விழாவில் பேசியிருக்கிருர்; 'தி. மு. கழகத்தின் இலட்சியங்களைக் குறை கூறியிருக்கிருரா -- கொள்கையில் குற்றம் கண்டுபிடித்திருக்கிருரா' என்று அவருடைய பேச்சைத் துருவிப் பார்த்தேன்; ஆனுல் அவர், 'தி. மு. கழகத்தின் கொள்கை தவறு என்று கூறிடவில்லை; கழக அரசைத் தான் தாக்கியிருக்கிருர்; 'கழக அரசு கொடுமைக்கார அரசு -- காங்கிரசாரைப் பழிவாங்குகிருர்கள் -- மாற்றுரை மதிப்பதில்லை' என்றெல்லாம் குற்றஞ்சாட்டிப் பேசியிருக்கிருர் !

"தேசியத் திருநாட்களில்கூட அவர் மேடையேறி, தி. மு. கழகத் தலைவர்களை -- அமைச்சர்களை -- கழகத் தொண்டர்களைத் தாக்குவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிருர் !"

இவ்வாறு, தி. மு. கழகத் தலைவர் கலைஞர் கருணுநிதி அவர்கள், திருவண்ணுமலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் மேலும் அவர் பேசியதாவது :—

'காமராசரைக் கேட்க விரும்புகிறேன் -- 'நீங்கள் ஆட்சியில் இருந்தபோது மாற்றுக் கட்சியை--எதிர்க் கட்சியை எவ்விதம் மதித்தீர்கள்' என்று !

தமிழகச் சட்டமன்றத்தில் நாங்கள் எதிர்க் கட்சியினராக இருந்தபோது நாவலர் அவர்கள்--எதிர்க் கட்சித் தலைவர் என்ற அளவில்--வெளிநாடுகளுக்குச் சென்றுவந்தார்; இங்கிலாந்தில் எதிர்க் கட்சித் தலைவருக்குத் தரப்பட்டிருக்கின்ற வசதிகள்--தகுதிகள் ஆகியவற்றை எடுத்துக்கூறி, 'அத்தகைய மரபுகளை நம் நாட்டிலும் உருவாக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

ஆனுல் காமராசர் ஆட்சி-- அவருக்குப் பக்கபலமாக இருந்த பக்தவத்சலம் ஆட்சி -- எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நாவலரின் கோரிக்கையைப் பொருட்படுத்தியதா ?

பல பத்திரிகைகள், நாவலர் கூறிய யோசனையை வெளியிட்டு, 'எதிர்க் கட்சியை மதிக்க வேண்டும்' என்று எழுதினவே -- காமராசர் ஆட்சி அவற்றைக் காதில் போட்டுக் கொண்டதுண்டா ?

குடியரசுத் தலைவராக இருந்த இராதாகிருஷ்ணன் அவர்கள் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தபோது, காமராசருடைய கட்சி, எதிர்க் கட்சித் தலைவரை அழைத்து மேடையில் இடம் தந்ததுண்டா ?

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் -- காங்கிரசு எதிர்க் கட்சியானபின், எதிர்க் கட்சித் தலைவருக்குக் கார் -- வீட்டு வசதி -- குமாஸ்தா -- டைப்பிஸ்டு -- மாத ஊதியம் வழங்குவதாக அறிவித்தோம்; இதை சட்டமன்றத்தில் கருத்திருமன் முதலில் வரவேற்றுவிட்டு -- பிறகு வெளியார் தலையீடு காரணமாகவோ என்னவோ -- ஏற்க மறுத்தார் !

1971 தேர்தலில் காங்கிரசார், 'அடுத்து தி. மு. கழகத்தினர் ஆட்சிக்கு வரமாட்டார்கள்; எதிர்க் கட்சி வரிசையில் உட்காரப் போகிருர்கள்; அதனுல்தான் அவர்கள் முன்னேற்பாடாக, எதிர்க் கட்சித் தலைவருக்குக் கார் முதலிய வசதிகள் செய்து வைத்துவிட்டார்கள்' என்று பேசினுர்கள்.

ஆனுல் பாவம் -- எதிர்க் கட்சியாக வருவதற்குக்கூடச் சிண்டிகேட்டுக்குத் தகுதியில்லை என்று மக்கள் தீர்ப்பு அளித்தார்கள்.

மேலவையில் பழைய காங்கிரசுக் குழுத் தலைவர் இராசாராம் நாயுடு அவர்கள், எதிர்க் கட்சித் தலைவருக்கென கழக அரசு அளித்த எல்லா வசதிகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

காமராசர் அவர்களே -- இதற்குப் பெயர்தான் மாற்றுரை மதிக்கத் தெரியாதது என்று பொருளா ?

ஆளுங்கட்சியாகக் காங்கிரசு இருந்தபோது 138 உறுப்பினர்கள் இருந்தார்கள்; அரசினர் தோட்டத்தில் அக்கட்சிக்கென்று பெரிய அறை ஒன்று ஒதுக்கப்பட்டது; 1967 தேர்தலில் அவர்கள் 50 பேர் ஆனபோதும் -- 1971 தேர்தலில் 15 பேராகக் குறைந்த பிறகும் -- முன்பு 138 பேராக இருந்தபோது பயன்படுத்திய அதே பெரிய அறைதான் வேண்டும் என்று கேட்டார்கள்; நாங்கள் அனுமதித்துள்ளோம்.

ஆனுல் 50 பேராக இருந்தபோது தி. மு. கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட அறையை-- 138 பேரானபோதும், 1971-ல் 183 பேரானபோதும் கூடத் தி. மு. கழகம் பயன்படுத்தி வருகிறது.

இது எதைக் காட்டுகிறது--காமராசர் அவர்களே ! 'மனம்' என்ற ஒன்று உங்களுக்கு இருக்குமானுல், அதைத்தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள்-- மாற்றுரை நாங்கள் மதிக்கவில்லையா என்று !

சென்னை தியாகராயநகரில், தீரன் சிவலிங்கம் சுரங்கப் பாதையைத் திறந்து வைத்தேன்; தேக்கு மரத் தேக்கத்தை தீக்கு இரையாக்கிச் செந்தமிழைக் காக்கத் தீக்குளித்த தீரன் சிவலிங்கத்தின் பெயரை அந்தச் சுரங்கப் பாதைக்கு வைத்ததைக் காமராசர் கண்டித்திருக்கிருர்; இப்படிப் பேசியது ஏதோ கருப்பசாமி விழாவில் அல்ல—காந்தியடிகள் விழாவில்தான் இப்படிப் பேசியிருக்கிருர் !

தியாகிகளை மதித்த தியாகச் செம்மலாம் காந்தியடிகள் விழாவில் காமராசர், தியாகிகளை இழிவுபடுத்தியிருக்கிருர்!

தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகளின் தோளோடு தோள் நின்று போராடிச் சிறைச் சென்று உயிரழந்த தியாகி வள்ளியம்மையை--நாகப்பனை-- நாராயணசாமியை -- அவர்களது தியாகத்தை--தஞ்சைத் தரணிக்கு வந்து தில்லையாடி சென்று மதித்து வீரவணக்கம் புரிந்தவர் காந்தியடிகள் !

(4-ம் பக்கம் பார்க்க)

பஸ் விபத்துக்குள்ளானவர்களுக்கு தமிழக ஆளுநர் ஆறுதல்

மருத்துவமனைக்கு அமைச்சர் இராசாராமுடன் சென்று பார்த்தார்

உதகை, அக். 4—

உதகையிலிருந்து மைசூர் செல்லும் பாதையில் பைக்காரா என்னுமிடத்தில பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 7 பேர் மரணமடைந்திருக்கின்றனர்.

45 பேருடன் சென்றுகொண்டிருந்த அந்தப் பஸ், பிரேக் பிடிக்காமல் போனதால், பள்ளத்தில் உருண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த 38 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

விபத்து நடந்த இடத்திலேயே நால்வர் மரணமடைந்தனர்.

கண்டக்டரும், இரு குழந்தைகளும் மருத்துவமனைக்கு வரும் வழியில் மரணமடைந்தனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் இருவர் நிலைமை கவலைக்கிடமானதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

உதகையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பொருட்டு வந்திருக்கும் ஆளுநர் ஷா'வும், அமைச்சர் க. இராசாராம் அவர்களும் விபத்தை அறிந்ததும் மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்தவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மாவட்டக் கலெக்டர் சிவகுமார் விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாகச் சென்று, தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

நெய்வேலி மின்சாரம் வருவது நின்றுவிட்டது

இளம் பொறியர்களின் வேலை நிறுத்தத்தின் விளைவு

நிலைமையைச் சமாளிக்கத் தமிழ்நாடு மின்வாரியம் ஏற்பாடு

நெய்வேலி, அக். 4—

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த இளம் பொறியர்கள் நேற்றிலிருந்து வேலை நிறுத்தம் செய்துவருதால், அங்குள்ள உரத் தொழிற்சாலையும், மற்றொரு தொழிற்சாலையும் மூடப்பட்டன.

இளம் பொறியர்களுடன், நடுநிலைத் தொழில் நுணுக்க ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள், 37 அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்திவருகின்றனர்.

வேலை நிறுத்தம் காரணமாக நெய்வேலி அனல் மின்சார நிலையத்திலிருந்து மின்சார வரத்து நின்றுவிட்டதாகத் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரி ஒருவர் சென்னையில் தெரிவித்தார். மின்சார உற்பத்திப் பிரிவு மூடப்பட்டதாகத் தகவல் கிடைத்திருப்பதாக அவர் கூறினர்.

"நேற்று விடுமுறை நாளாகையால், மின்சார வரத்துக் குறைவால் ஏற்படும் நிலைமையை உணர முடியவில்லை" என்ருர்.

"கேரளத்திலிருந்தும் மைசூரிலிருந்தும் மின்சாரத்தைப் பெற்று, இந்த இழப்பு ஈடுகட்டப்படும்" என்றும் அவர் கூறினர்.

அரசுச் செய்திகள்
குத்தகை-
ஒப்பந்தப் புள்ளி
வேலைவாய்ப்பு-
விளம்பரங்கள்
அனைத்தையும்
அறிந்து கொள்ள
வாங்குங்கள்
தமிழரசு
தமிழ்நாடு அரசின்
திங்கள் இருமுறை ஏடு
அரசினர் தோட்டம், சென்
விலை 35 காசு

ஆயுர்வேத மருத்துவர் பதிவு

நிறுத்துமாறு மருத்துவ மத்தியக் கழகம் யோசனை

சென்னை, செப். 30—

பரம்பரையாக ஆயுர்வேத மருத்துவம் செய்துவருகின்றவர்களைப் பதிவுசெய்வதை 1972 அக்டோபரிலிருந்து நிறுத்துமாறு நாடாளுமன்றச் சட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள இந்திய மருத்துவ மத்தியக் கழகம், எல்லா மாநில அரசுகளுக்கும் யோசனை கூறும்.

இத்தகவலை, அந்தக் கழகத்தின் உறுப்பினர் டாக்டர் வி. நாராயணசாமி தெரிவித்திருக்கிறார்.

"தகுதி பெற்ற ஆயுர்வேத — யுனானி மருத்துவர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்" என்றும் அது கூறும்?

சுமார் 40,000 இந்திய முறை மருத்துவர்கள் உள்ளனர்; அவர்களில் கால் பங்கினரே தகுதி பெற்றவர்கள்; மற்றவர்கள் பரம்பரையாக மருத்துவத் தொழிலை மேற்கொண்டவர்கள்.

ஆயுர்வேத — யுனானி மருத்துவம் கற்பிக்கும் 70 கல்லூரிகள் இந்தியாவில் உள்ளன. சராசரி 3 500 பேர் அவற்றில் ஆண்டொன்றுக்கு சேருகிறார்கள்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியளிப்பு

சென்னை, செப். 30—

சீரணியின் சார்பில் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியளிக்கும் விழா, 5—10—71 மாலை 6 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும்.

தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் வரவேற்புரையாற்றுவார்.

முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் நிதியும் — கேடயமும் வழங்குவார்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, மற்றும் மாவட்டச் சீரணித் தலைவர்கள் பாராட்டுரை வழங்குவர்; முதல்வர் சிறப்புரையாற்றுவார்.

திரு. டி. ஆர். பாப்பா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

அரக்கோணத்தில் உருக்காலை

இரஷ்ய உதவியுடன் உருவாகிறது

சென்னை, செப். 30—

இரஷ்ய ஒத்துழைப்புடன் அரக்கோணத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன், சிறிய உருக்காலையை நிறுவ இடையறாது வேலை செய்து வருகிறது; விரைவில் அது இயங்கத் துவங்கும்.

சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் அது இருக்கிறது; ஆண்டில் 50,000 டன் உருக்குப் பாளங்களை தயாரிக்கும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது; அதன் உற்பத்திச் சக்தியை இரட்டிப்பாக்க முடியும்.

அந்த ஆலை, பயனற்றதாக எறியப்படும் இரும்புத் துண்டுகளை உருக்காக மாற்றும்; அதில் ஒரு முக்கிய அம்சம், பரவலாக ஆட்டோமேஷன் பயன்படுவதாகும்; பல்வேறு உற்பத்திக் கட்டங்களை கட்டுப்பாட்டு அறையிலிருந்து கொண்டு டெலிவிஷனில் பார்க்க முடியும்.

ஆலையை நிறுவ 7 இரஷ்ய நிபுணர்கள் உதவுகிறார்கள்; ஆலை உற்பத்தியைத் தொடங்கும்போது மேலும் 13 பேர் வருவார்கள்.

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி கனிவுரை

கழக வளர்ச்சிக்கு இன்னுயிர் ஈந்த குடும்பங்களை நிராதரவாகவிட்ட நிலை தி.மு.க. வரலாற்றில் இல்லை

அயராது உழைத்துத் தொண்டாற்றியவர்கட்கு உரிய மதிப்பைத் தந்த உன்னதமான வரலாறும் கழகத்திற்கு உண்டு

சென்னை, அக். 4—

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தங்கள் இன்னுயிர் இழந்தோர் — கை கால்களை இழந்தோர் — கண்களை இழந்தோர் கழகத்தில் ஏராளமானோர் உண்டு; அவர்களது குடும்பங்களை நிராதரவாக நடுத் தெருவில் விட்டுவிட்ட நிலைமை தி. மு கழக வரலாற்றில் கிடையாது!

"ஆளுங்கட்சியினராக இன்றையத்தினம் இருக்கிறோம் — அந்தச் செல்வாக்கினால்தான் தியாகிகளின் குடும்பங்களைக் காத்துவருகிறோம் என்பதல்ல — எதிர்க் கட்சியாக இருந்தபோதுகூட, தனது இயக்கத் தியாகிகளின் குடும்பங்களைக் காத்த உன்னதமான வரலாறு தி. மு. கழகத்திற்கு உண்டு!"

இவ்வாறு, தி. மு. கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அக். 1-ஆம் நாளன்று 19-வது வட்டத்தில், மாநகராட்சி இடைத் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:—

"அயராது உழைக்கக்கூடிய இலட்சோப இலட்சம் தொண்டர்களைப் பெற்றதுதான் தி. மு. கழகம்!

தி. மு. கழகம் என்பது, சில அமைச்சர்களை — மாவட்டச் செயலாளர்களை — எம் எல்.ஏ.-க்களை — எம்.பி.-க்களை — இன்னாள் மேயர்களை — முன்னாள் மேயர்களைக் கொண்டது மட்டுமல்ல; இலட்சக்கணக்கான சாதாரணத் தொண்டர்களின் இரத்தம் தான் தி. மு. கழகம்; அப்படிப்பட்ட உண்மையான தொண்டர்களுக்கு மதிப்புத் தரும் ஒரே இயக்கம் — தி மு. கழகம்!

இன்றுகூட மாலையில், சைதாப்பேட்டையையும் — தியாகராய நகரையும் இணைக்கும் சுரங்கப் பாதை ஒன்றைத் திறந்துவிட்டுத் தான் இங்கு வந்திருக்கிறேன்; அந்தச் சுரங்கப் பாதைக்குத் தாய்த் தமிழ் காக்கச் செந்தணல் புகந்துத் தீக்குளித்தவர்களில் ஒருவரான சிவலிங்கம் நினைவாக, 'தீரன் சிவலிங்கம் சுரங்கப் பாதை' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது! இவ்விதம், தியாகிகளை மதிக்கும் மாண்புள்ள இயக்கம் தி. மு. கழகம்தான்!

"'தி. மு. கழகத்திற்குக் கிடைக்கும் எல்லாப் பெருமையும் எனக்கே — எனது உழைப்பால் கழகத்திற்குப் பெருமை சேர்ப்பேன் — அந்தக் கழகத்திற்காக உயிரையும் மூச்சையும் பணயமாக வைத்துப் பாடுபடுவேன்' என்று கூறும் உண்மையான தொண்டர்களும் தி. மு. கழகம் வளருகிறது; அத்தகைய உண்மையான தொண்டனைத் தி. மு. கழகம் கைவிட்டதில்லை — கைவிடப்போவதுமில்லை; ஏனெனில், நாங்கள், தொண்டர்களின் உள்ளங்களைப் புரிந்துகொண்டிருப்பவர்கள் — தொண்டர்களை மதிப்பவர்கள்; காரணம், நாங்களே தொண்டர்களாக இருந்து தொல்லைகள் பலவற்றை அனுபவித்து வளர்ந்தவர்களாவோம்!"

மாற்றுக் கட்சித் தியாகிகளையும் மதிக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.

கலைஞர் கருணாநிதி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தனது கட்சியைச் சேர்ந்த தியாகிகளை மட்டுமன்றி வேறு கட்சிகளைச் சார்ந்த தியாகிகளையும் மதிக்கும் பண்பு தி. மு. கழகத்திற்கு உண்டு.

இருபதாண்டுக்கால காங்கிரஸ ஆட்சியில் தியாகிகள் எவ்வளவு பேர் மதிக்கப்பட்டனர் என்பதை நாடு அறியாததல்லவே!

தி. மு கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், தென்னாப்பிரிக்காவில் காந்தியாருடன் சேர்ந்து நிறவெறியை எதிர்த்துப் போராடிச் சிறை சென்று — எலும்புருவாய் வெளிவந்து மாண்ட தியாகி தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி ஆகியோருக்கு ரூ 10 இலட்சம் செலவில் நகரமும் — நினைவுச் சின்னங்களும் அமைத்தோம்!

நிறவெறி எதிர்ப்புப் போரில் தங்களைப் பலியிட்டுக்கொண்ட அந்தத் தியாகிகளை — அவர்கள் எந்தக் கட்சியினர் ஆயினும் — மதிப்பது நமது கடமை என்ற உணர்வில் தி. மு. கழக அரசு, தில்லையாடி வள்ளியம்மைநகரை அமைத்து விழாக் கொண்டாடி அவர்களுக்குப் பெருமை சேர்த்தது!

திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தியாகிகளுக்கு உதவிப் பணம் தரும் திட்டம் உருவாக்கப்பட்டு — அவருடைய காலத்தில் ஐந்து தியாகிகளுக்கு மட்டுமே உதவிப் பணம் தரப்பட்டது!

தி மு. கழக அரசின் இன்றையத் தினம், 7.000 காங்கிரசுத் தியாகிகளுக்கு உதவிப் பணம் தரப்படுகிறது; இதன் மூலம் ஆண்டிற்கு ஏறத்தாழ ரூ 40 இலட்சம் செலவாகிறது என்றாலும், 'தியாகி'களுக்கு உதவுகிறோம்' எனும் மன நிம்மதி எங்களுக்கு ஏற்படுகிறது!

நம்மைப்பற்றி இப்போது 'வாயார'ப் பேசிக்கொண்டிருக்கிறாரே காமராசர் — அவருக்கேகூட — 1959-ம் ஆண்டில் மாநகராட்சி நிர்வாகம் முதன்முதலாக நம்மிடம் வந்தபோது — சிலை அமைத்து, பண்டித நேருவைக் கொண்டு அதனைத் திறக்கச் செய்தோம்!

ஆகவே, தியாகிகளை மதிக்கக் கொண்டது தி. மு. கழகம் தான் என்பது, இவை அனைத்தின்மூலம் நன்கு தெளிவாகிறது."

காரணம் என்ன இதற்கு?

சென்னை அக். 4—

"மாற்றுக் கட்சியிலிருக்கும் நல்ல தோழர்கள் பலர், தி. மு. கழகத்தை நோக்கி வருகின்ற நேரம் — இது நல்ல நேரம்!

"அவர்கள் எல்லாம், கழகத்துடன் இணைந்துகொள்வதற்கான நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்!

"இதற்குரிய காரணம் என்ன? — 'தி. மு. கழகத்தைத் தவிர, தமிழ்நாட்டின் உரிமைகளை — தமிழ் இனத்தின் உரிமைகளைக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் வாதாடி — போராடிப் பெறுகின்ற கட்சி வேறு எதும் இல்லை' என்பது தான்!"

—கலைஞர் கருணாநிதி

'தீரன் சிவலிங்கம் சுரங்கப் பாதை' திறப்பு விழா

கலைஞர்—நாவலர்—மேயர் பங்கேற்பு

சென்னை, அக். 4—

ரூ. 21 இலட்சம் செலவில் தியாகராயநகர் துரைசாமி சாலையில், மேற்கு மாம்பலத்தையும் — தியாகராய நகரையும் இணைக்கும் சுரங்கப் பாதை திறப்பு விழா அக். 1-ம் நாளன்று நடைபெற்றது.

இந்தி எதிர்ப்பு அறப்போரில் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்த சிவலிங்கத்தின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ள 'தீரன் சிவலிங்கம் சுரங்கப் பாதை'யை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திறந்துவைத்தார்.

கிழக்கு — மேற்காகச் செல்லும் இந்தச் சுரங்கப் பாதையின் மொத்த நீளம் 963.60 அடி; இதில் இரயில்வே பகுதியின் நீளம் மட்டும் 88 அடி வண்டிகள் போவதற்காக உள்ள மையப் பகுதியின் அகலம் 24 அடி; இதற்கு இரு பக்கத்திலும் 5 அடி அகலமுள்ள நடைபாதைகள் உண்டு. தரையில் இருந்து இருப்புப் பாதை வரையில் பாதையின் உயரம் 12.

இது தவிர, சுரங்கப் பாதைக்குக் குறுக்கே ஏரிக்கரை சாலையையும் — இரயில்வே பார்டர் சாலையையும் இணைக்கும் 41.60 அடி மேம்பாலம் ஒன்றும் உண்டு; இதன் இரு பக்கங்களிலும் 5 அடி அகலமுள்ள இரு நடைபாதைகள் உண்டு; பாதசாரிகளுக்கான நடை மேம்பாலம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

இடையூறுகளைப் பொருட்படுத்தக்கூடாது

இந்தச் சுரங்கப் பாதையைத் திறந்துவைத்துப் பேசுகையில் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"பொதுப் பணிகளை நிறைவேற்றுகையில் தனிப்பட்ட சிலருக்கு ஏற்படும் இடையூறுகளை அவர்கள் பெரிதுபடுத்தக்கூடாது; பெரும்பான்மையான மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

"மக்களின் தேவைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவதில் அரசாங்கத்துடன் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்

"இந்தியை எதிர்த்து நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் இதே பகுதியில் தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டு உயிர்த் தியாகம் செய்து கொண்ட தி. மு. கழகத் தொண்டரின் நினைவாக 'தீரன் சிவலிங்கம்' பெயரை இந்தச் சுரங்கப் பாதைக்குச் சூட்டுகிறேன்."

சென்னை நகர வளர்ச்சிக்குத் திட்டம்

அமைச்சர் நெடுஞ்செழியன் தரும் தகவல்

விழாவில் கலந்துகொண்டு கல்வி — உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"சென்னை நகரை மிகப் பரந்த அளவில் விரிவாக்கி — வேண்டிய வசதிகளையும் அமைத்துக் கொடுக்கத் திட்டம் ஒன்றை தமிழக அரசு தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறது; இந்தத் திட்டம் 1971 லிருந்து 1991 வரை, சுமார் 20 ஆண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றுவதாக இருக்கும்.

சென்னை நகர் 260 சதுர மைல் பரப்புள்ளதாக விரிவாக்கப்படும்; இதற்கு மதிப்பிடுச் செலவு ரூ 186 கோடி.

மத்திய அரசு ஒப்புதல் அளித்ததும் இப்பெரிய திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்."

விழாவிற்குத் தலைமை வகித்த மேயர் திரு. சா. கணேசன், நகர சபைக்கு அரசு அளித்துவரும் நிதி உதவிகளுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

சென்னையில் வனவிலங்கு வார விழா

ஆளுநர் கே. கே. ஷா தொடங்கி வைத்தார்

முதல்வர் உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர்

சென்னை, அக். 4—

பாலர் அரங்கில் வன விலங்கு வார விழாவை அக். 1-ம் நாளன்று கவர்னர் கே. கே. ஷா துவக்கி வைத்தார்; 'வனங்களையும் — வன விலங்குகளையும் பேணிக்காப்பதை விஞ்ஞான ரீதியில் அணுக வேண்டும்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

விழாவுக்கு மின்சார வனத்துறை அமைச்சர் ஓ பி. இராமன் அவர்கள் தலைமை வகித்தார்.

வன விலங்குகளைப் பேணிக்காப்பதன் அவசியத்தை வலியுறுத்தி முதலமைச்சர் செய்தி ஒன்றை விடுத்திருந்தார்; அதில், வன விலங்குகள் பாதுகாப்பு வாரத்தையொட்டிக் கீழ்க்கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்:—

"மனித நாகரிகத்தின் அடித்தளமாக அமைந்துள்ள இயற்கைச் சூழ்நிலைப் பேணிப் பாதுகாக்கும் அடிப்படைச் சிறப்பை உணர்ந்து, நமது தலைமுறையினர் வருங்கால சந்ததியினருக்காக விட்டுச் செல்லும் — மறைந்து வரும் நமது வன விலங்குகளையும், குன்றிவரும் நமது காட்டுப் பகுதிகளையும் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று உளமார உறுதிமொழிகிறேன்."

இந்த உறுதிமொழியை வனத்துறை அதிகாரி ஒருவர் படிக்க— ஆளுநர், அமைச்சர் உட்பட அனைவரும் உறுதிமொழி எடுத்தனர்.

வனப் பாதுகாப்புத் தலைமை அதிகாரி டி. பி. ஜம்புலிங்கம் அனைவரையும் வரவேற்றார்; 'மஞ்சம்பட்டி, பூனாச்சி, டாப்சிலிப் பகுதிகளில் மூன்று பிளாக்குகள் அடங்கிய சரணாலயம் அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது' என்றும் அவர் தெரிவித்தார்.

"முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை மேம்பாடு செய்வதற்காக விரிவான பெரிய திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பொருட்டு, இந்திய வனவிலங்கு போர்டு வட்டாரச் செயலாளர் கோர்பாடே தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

இரஷ்யக் கான்சல் — ஜெனரல் புரோலோவும் பேசினார்.

வன விலங்கு வாரம்

நாடு முழுவதிலும் விழா

புதுடில்லி, செப். 30—

பதினேழாவது வன விலங்கு வாரம் அக்டோபர் முதல் வாரத்தில் நாடு முழுவதிலும் கொண்டாடப்படும்.

இந்த விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதற்காக எல்லா மாநிலங்களிலும் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வன விலங்கு வார விழா கொண்டாட்டத்தின்போது, பள்ளிக் குழந்தைகளும் — மாணவர்களும் மிருகக் காட்சிசாலை — பொருட்காட்சிசாலை — வனவிலங்கு புகலிடங்கள் — காடுகள் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

வன விலங்குகள் பற்றிய புகைப்படப் போட்டிகள், ஓவியப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன; இப்போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.

சில இடங்களில் யானைகளும் மற்றும் பல விலங்குகளும் கொண்ட ஊர்வலங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

சில இடங்களில் பொதுக்கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன; அந்த நேரத்தில், வனவிலங்குகளைப் போற்றிப் பாதுகாப்பதாகப் பொதுமக்களும் — மாணவர்களும் சிறப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்வார்கள்.

வீடு கட்டும் திட்டத்துக்கு ஆயுள் இன்சூரன்சு நிறுவன உதவி

தமிழ்நாட்டுக்கு ரூ. 1.50 கோடி கிடைக்கும்

புதுடில்லி, அக். 4—

குறைந்த — நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் நிதி ஒதுக்கியிருக்கிறது; இதில் தமிழ்நாட்டுக்குத்தான் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களில் இம்மாதிரி திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 11.65 கோடியாகும்; இதில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1.5 கோடியாகும்.

மாநிலங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை நவம்பர் 30 ம் நாளுக்குள் வாங்கிக்கொள்ள வேண்டும்.

கடன் தொகையை நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் — குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் — மாநில அரசு ஊழியர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக வீடுகள் கட்டும் திட்டம் — நிலம் கையகப்படுத்தல் — அபிவிருத்தித் திட்டம் — கிராமங்களில் வீடு கட்டும் திட்டம் ஆகியவற்றிற்குத்தான் பயன்படுத்தலாம்.

கடனுக்கு 8-சதவிகிதம் வட்டி தரவேண்டும்; ஆறு திங்களுக்கு ஒரு தடவை வட்டி கணக்கிடப்படும்.

கடன் தொகையைத் தவணைகளாக 25-ஆண்டுகளில் திருப்பிச் செ[illegible] வேண்டும்.

குற்றத் தடுப்பு தேசிய வாரம்

முதலமைச்சர் கருணாநிதி தொடங்கிவைப்பார்

சென்னை, அக். 4—

குற்றத் தடுப்பு தேசிய வாரம் சென்னை நகரில் அக்டோபர் 10-ந் தேதியிலிருந்து 16-ந் தேதி வரை கொண்டாடப்படும்.

அக்டோபர் 10-ந் தேதியன்று [illegible]ராஜாஜி மண்டபத்தில், உயர் [illegible]றத் தலைமை நீதிபதி கே. [illegible]மி தலைமையில், முதலமைச்[illegible] கருணாநிதி அவர்கள் [illegible] கிவைப்பார்.

([illegible]க்க)

விசாரணையின்றி 14,500 பேர்

இலண்டன், செப். 30—

"இலங்கையில் 14,500 பேர்களுக்குமேல் எந்தவிதமான விசாரணையுமின்றி கடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறைகளில் வைக்கப்பட்டிருக்கின்றனர்"

என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் லார்டு ஆல்டரி நிருபர்களிடம் கூறினார்; இவர் அண்மையில் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டவராவார்.



காந்தியடிகளுக்குத் தமிழகம் செலுத்திய அஞ்சலி

தலைநகரில் இதுவரை நடந்திராத அளவுக்கு விழா நிகழ்ச்சிகள்

மாபெரும் அலங்கார ஊர்திகள் ஊர்வலம் — அணிவகுப்பு

கடற்கரையில் அனைத்துக் கட்சிகள் பங்கேற்ற பொதுக்கூட்டம்

சென்னை, அக். 4—

காந்தியடிகளின் 103-வது பிறந்த நாளைக் கொண்டாடத் தமிழக அரசு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது; அன்று மாலை, காந்தியடிகளின் கொள்கைகளை விளக்கியும் — அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கியும் அலங்கார ஊர்திகளின் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

காந்தி இல்லத்தில் அன்று முழுவதும், நூல் நூற்றல் -பஜனைப் பாடல்கள் நடைபெற்றன.

மெரினாவில் உள்ள காந்தியார் சிலைக்கு ஏராளமான மக்கள் மலர்மாலைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

அமைதிப் பயணம் — முதல்வர் துவக்கினார்

அங்கிருந்து, முதல் தட்வையாக அனைத்துலக இயக்கத்தின் அமைதிப் பயணம் ஒன்று முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

இந்த இயக்கத்தை, சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த எஞ்சினீயர் ஒருவர் தொடங்கியிருக்கிறார்.

முதலமைச்சர் கருணாநிதி அவர்களும் இந்த அமைதிப் பயணத்தில் கலந்துகொண்டதுடன், இதன் தத்துவ முழக்கங்களைத் தாங்கிய அட்டையைப் பிடித்துக்கொண்டு சிறிது தூரம் நடந்து சென்றார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டதும், சாதி — சமய — இன வேறுபாடுகளைக் கடந்ததும், தொண்டு ஒன்றையே இலட்சியமாகக் கொண்டதுமான இந்த இயக்கம் நடத்திய அமைதிப் பயணத்தில் 700-க்கும் மேற்பட்ட மாணவ — மாணவியர் கலந்துகொண்டனர்.

இந்தப் பயணம், சாந்தோம் கடற்கரையிலுள்ள காந்தி சிலையிலிருந்து புறப்பட்டு — சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அண்ணா கல்லறையை அடைந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவ — மாணவியர், 'தேவை செயலேயன்றி சொல் அல்ல' என்ற வாசகம் பொறித்த அட்டைகளை ஏந்திச் சென்றனர்; மக்களுக்கு சமூக சேவைத் துறையில் ஆர்வம் ஏற்படுத்துவதும், உலகில் பின்தங்கியுள்ள நாடுகளிலுள்ள ஏழை மக்களுக்கு உதவ நிதி திரட்டுவதும் இந்த அமைதிப் பயணத்தின் குறிக்கோள்களாகும்.

அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம்

அன்று மாலை மெரினா கடற்கரை சீரணி அரங்கில் — முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திருமதி டி. அனந்தநாயகி (சிண்டிகேட்) திருப்பூர் மொய்தீன் (முஸ்லிம் லீக்) டி. கே. சண்முகம் (தமிழரசுக் கழகம்) எச். வி. ஹண்டே (சுதந்தரா), ஏ. ஆர். மாரிமுத்து (பி.சோ) ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக்), எஸ் எஸ். இராமசாமி படையாட்சி (உழைப்பாளர் கட்சி) ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

உதவித் தொகை அளிப்பு விழா

சென்ற ஆண்டு காந்தி பிறந்த நாள் விழாவின்போது முதலமைச்சரால் வெளியிடப்பட்ட திட்டப்படி, தமிழகத்தில் உள்ள 14 மாவட்டங்களிலிருந்து பி யு. சி. வகுப்பில் மிக அதிகமான மார்க்குகள் வாங்கியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ — மாணவிகளுக்கு (14 மாணவர்கள் — 13 மாணவிகள்) கல்வி உதவித் தொகைகளை முதலமைச்சர் வழங்கினார்.

காந்தி பிறந்த நாளையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் மிகச் சிறந்த முறையில் ஊர்திகளைத் தயாரித்ததற்காக மூன்று தனிப்பட்டோர் நிறுவனங்களுக்கும் முதல்வர் பரிசுகளை வழங்கினார்.

தமிழக ஆளுநர்—சட்டமன்ற அவைத் தலைவர்—கல்வி அமைச்சர் ஆகிய மூவர் கொண்ட நடுவர் குழு இந்தத் தேர்வுகளைச் செய்தது.

அரசு மீன்பிடித் துறை—கூட்டுறவுத் துறை—மின்சாரத்துறை ஆகியவை பரிசு பெற்ற அரசு துறைகளாகும்.

அமால்கமேஷன் (பிரைவேட்) லிமிடெட், சத்யா ஸ்டுடியோ. ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் ஆகிய மூன்றும் பரிசு பெற்ற தனியார் நிறுவனங்களாகும்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பிறகு, திரைப்பட இசை அமைப்பாளர்கள் சங்கர்—கணேஷ் குழுவின் திரைப்படப் பின்னணியினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு

காந்தியடிகளின் 103-வது பிறந்த நாள் விழாவையொட்டி, அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது; தமிழக அரசு இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது.

ஜெமினி சந்திப்பிலிருந்து துவங்கிய இந்த ஊர்வலத்தில் 60 ஊர்திகள் கலந்துகொண்டன; இவை ஒவ்வொன்றும் காந்தியடிகளின் வாழ்க்கையைச் சித்தரிக்கின்றவைகளாகவும், கிராம வளர்ச்சி — கதர்த் தொழில் — தீண்டாமை ஒழிப்புப் போன்ற காட்சிகளாகவும் இருந்தன.

ஜெமினி சந்திப்பிலிருந்து துவங்கிய இந்த ஊர்வலத்தை, மவுண்ட்ரோடு கலைக் கல்லூரிக்கு அருகில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அமர்ந்து ஆளுநர் — முதலமைச்சர் — அமைச்சர்கள் — சட்டமன்ற அவைத் தலைவர் — அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் — வெளிநாட்டுத் தூதுவர்கள் — மற்றும் பிரமுகர்கள் — பொதுமக்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

அலங்கார ஊர்திகளின் ஊர்வலம் கலைக் கல்லூரிக்கு அருகில் வந்தபோது, ஊர்வலத்தைக் காணவந்திருந்த சிறப்பு அமைப்பாளர்களுக்கும் — பொதுமக்களுக்கும் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் நல்வரவு கூறினார்.

கவர்னர் திரு. கே. கே. ஷா குழுமியிருந்த கூட்டத்தினரிடையே பேசுகையில், மிகவும் சிறப்பான முறையில் காந்தியடிகளின் பிறந்த தின விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்த முதலமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் கட்சித் தலைவர்களையும் பாராட்டினார்.

"தமிழ்நாட்டில் நான் பார்த்து உணர்ந்ததிலிருந்து சமுதாய — பொருளாதார அரசியல் பிரச்சினைகளில் தமிழகம் காந்தியத் தத்துவத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்று ஆணித்தரமாகக் கூறமுடியும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"கௌதம புத்தருக்குப் பிறகு உலக மக்களின் உள்ளங்களில், சிறப்பான இடம் பெற்ற காந்தியடிகளின் தத்துவங்களை இளந்தலை முறையினரிடம் எடுத்துக் கூறவும், பொதுவாழ்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிகள் பற்றி காந்தியடிகள் கூறியுள்ள கருத்துக்களை எடுத்துரைக்கவும் நாம் மறந்துவிட்டோம்" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

அலங்காரத் தேர்களின் அணிவகுப்பை முன்னின்று நடத்திச் செல்லும் வாய்ப்பை திருவையாறு நாதசுரக் கல்லூரி மாணவர்கள் பெற்றிருந்தனர்.

தனியார் துறையினராலும், அரசுத் துறைகளின் மூலமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஊர்திகளின் இடையிடையே பள்ளி மாணவர்கள் — சாரணர்கள் — சீரணியினர் .. ஊர்க்காவல் படையினர் — தேசிய மாணவர் படையினர் — போலீசுத் துறையினர் ஆகியோர் அணிவகுத்து வந்தனர்.

அண்ணாசாலை — வாலாஜா சாலை — திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை — பைகிராப்ட்ஸ் சாலை வழியாக அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு சீரணி அரங்கை அடைந்தது.

வழிநெடுகிலும் திரளான மக்கள் திரண்டிருந்து ஊர்வலத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

அலங்காரத் தேர்களின் ஊர்வலத்தைத் தாழப் பறந்த ஹெலிகாப்டர் விமானத்திலிருந்து கொண்டு திரைப் படம் எடுத்தனர்.

கிண்டி காந்தி மண்டபத்தில் மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் தமிழகக் கவர்னர் கே.கே. ஷாவும், அவரது மனைவியும் பங்கு கொண்டார்கள்.

அம்மைத் தடுப்பு ஊசிக்கு அவசியமில்லை

ஜெனீவா, அக். 1—

"முன்னேற்றமடைந்த நாடுகள், இனிமேல் அம்மை நோய்த் தடுப்பு ஊசிக் குத்திக்கொள்வதைக் கைவிட்டுவிடலாம்"

என்று உலக சுகாதார நிறுவனம் கருத்தறிவித்திருக்கிறது.

"பிரிட்டன் கடந்த ஜூலையில் இதை ரத்து செய்வதாக அறிவித்திருந்தது; அமெரிக்காவும், இதுபோல் அம்மை நோய்த் தடுப்பு ஊசிக் குத்திக்கொள்ளும் முறையைக் கைவிட்டுவிடலாம்"

என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது.

"நவீன மருத்துவ வசதிகளைக் கொண்டிருக்கும் நாடுகளில், அம்மை நோயைவிட நோய்த் தடுப்பு ஊசியால் ஏற்படும் கெடுதலே அதிகம்" என்று அது கூறியது.

மதுரை மேயர் முத்து பம்பாய் வருகை

அண்ணா பிறந்த நாள் விழாவில் பங்கேற்பு

பம்பாய், அக். 1—

பம்பாய்-தாராவி இலக்குமிசால் எம். ஜி. ஆர். மன்றம், செம்பூர் தி. மு க., மலாடு கிளை, பூனா தி.மு.க, ஆமதாபாத் தி. மு. க., ஆகிய அமைப்புகளின் சார்பில் நடைபெறவிருக்கும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மதுரை மேயர் எஸ்.முத்து அவர்கள் அக். 24-ம் நாள் பம்பாய் வருகிறார்.

அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கவும்— அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தவும் பம்பாய் தி மு.க. கிளைத் தோழர்களும், இலட்சுமி சால் எம். ஜி. ஆர். மன்றத் தோழர்களும் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவர்கள்

அத்தனைப் பேர்கள் சார்பிலும் நான் மன்னிப்புக் கேட்கிறேன்

காந்தி வழியில் இந்த நாடு செல்லவேண்டும் என்பதே கழக அரசின் குறிக்கோள்

கடற்கரை அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி விளக்கம்

சென்னை, அக். 4—

"காந்தியடிகளின் எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு என்னென்ன தடைகள் இருக்கின்றன என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"காந்தியடிகள் சொல்லிவந்த கதர் -- ஆலய நுழைவு -- தீண்டாமை ஒழிப்பு -- சாதி ஒழிப்பு - வன்முறை தவிர்ப்பு -- அரிசன முன்னேற்றம் ஆகியவற்றில் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை மக்கள் அறிவார்கள்.

"காந்தியின் வழிக்கு இந்த நாடு வர வேண்டும் என்பதற்காகவே இப்படிப்பட்ட விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

"காந்தியின் கொள்கையை மக்கள் மனத்தில் பதிய வைக்க ஒத்துழைத்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் -- ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் -- அவர் கொள்கையைப் பாடிய கலைஞர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், காந்தியாரின் 103-வது பிறந்த நாளையொட்டி தமிழக அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கூறினார்; அவரது உரையின் முக்கியப் பகுதி வருமாறு:—

"இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய சுதந்தராக் கட்சி உறுப்பினர் திரு. எச். வி. ஹண்டே, 'நாமெல்லாம் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்று கூறினார்; அவசர அவசரமாகப் பேசிவிட்டு இரயிலுக்குப் போன அவர் சார்பிலும்--காந்தியடிகளிடம் அனைவரும் மன்னிப்புக் கேட்க முடியாது என்பதால் உங்கள் சார்பிலும் இந்த விழாவில் நானே மன்னிப்புக் கேட்க முன்வருகிறேன்.

ஒரு மகாத்மாவின் கொள்கைகள் அனைத்தினையும் பின்பற்றுவது என்பது முடியாத காரியம் தான்; இதை, இங்கு பேசிய ஸ்தாபனக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்த நாயகி அம்மையார், 'எல்லோரும் மகாத்மாவாகிவிட முடியாது' என்று வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கொள்கையில் காந்தியார் கொண்டிருந்த கருத்து, 'அது, மிகவும் பாவமான ஒன்று' என்பதே; மக்கட் தொகைப் பெருக்கத்தைத் தடுத்தாக வேண்டிய அவசிய நிலை நாட்டுக்கு ஏற்பட்டபோது அவர் தம் கொள்கையிலிருந்து தம்மை மாற்றிக் கொள்ளவில்லை; 'குடும்பக் கட்டுப்பாடு தேவை' என்கின்ற போது, 'அதை மன ஒருமைப்பாட்டின்மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், இன்று அவர் கொள்கைக்கு விரோதமாகக் கருத்தடை முறையைக் கொண்டு வந்துவிட்டார்கள்; எனவே, அவர்களின் சார்பாக நான் காந்தியடிகளிடம் இப்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

தாய்மொழியைப் பொறுத்தமட்டில், 'அந்தந்த மாநிலத்து மக்[illegible] அவர்களது தாய்மொழி[illegible]தான் கல்வி பயில வேண்[illegible]; அதுதான் தாய்ப்பால் [illegible]த்து வளரும் குழந்தையின் [illegible]யைப் போன்றது; வேற்று [illegible] பயில்வது புட்டிப்பால் குடிப்பதைப் போன்றது' என்ற கருத்தைக் காந்தியார் கொண்டிருந்தார்; இது அவருடைய பொன்மொழியாகும்; அந்தப் பொன்மொழியின்படி நானும்-- தி. மு. க. அரசின் சார்பில்-- தமிழை, 'பயிற்று மொழி' என்று கொண்டுவந்தேன்.

ஆனால் அதை எதிர்க்கும்படி இங்கு சிலர், மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்புக் காட்டினார்கள்; அந்த எதிர்ப்பாளர்களின் சார்பில் நான் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையில், இந்தியா முழுமையும் ஒரே சீரான கொள்கையைக் கடைபிடித்தாக வேண்டும் -- தமிழகத்தில் அது விரைவில் ஒத்திவைக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே கடந்த மூன்று ஆண்டுகளாக வாதாடி வாதாடிப் பார்த்தேன்; 'அனைத்து இந்தியாவிலும் மதுவிலக்கு வரவேண்டும்' என்று நான் விரும்பிய நேரத்தில், காந்தியடிகளின் கொள்கைகளைக் கடைபிடித்து நடப்பவர்களின் பின்னால் கொடி பிடித்து ஆளுகின்ற மாநிலங்களில் முதலில் ரத்து செய்யப்பட்டுவிட்டது; சுதந்தராக் கட்சியினர் ஆளும் ஒரிசாவிலும் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

இப்படியெல்லாம் மதுவிலக்கை ரத்தும் செய்ததில் -- எங்களுக்கு முன்னால் ரத்துச் செய்தவர்களின் சார்பில் காந்தியடிகளிடம் இதற்காகவும் மன்னிப்புக் கேட்கிறேன்.

'தன் தாய் மொழியில்தான் ஆண்டவனை வழிபட வேண்டும்' என்று காந்தியடிகள் விரும்பினார்; அதன்படி, ஆண்டவனைத் தமிழர்களின் தாய் மொழியான தமிழில் வணங்குவதற்கு இங்கே வழி வகுத்தோம்; இப்படி அர்ச்சனைகள் தமிழில் செய்யலாமா என்று அதற்காகச் சிலர் நீதி மன்றம் வரையில் சென்றுவிட்டார்கள்.

தாய்மொழியில் வணங்க வழி வகுத்தவர்களை எதிர்த்து, நீதி மன்றம் சென்றுள்ளவர்களின் சார்பிலும் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்களின் பொறுப்புத் துறைகள்

ஆளுநர் மாளிகை அறிவிப்பு

சென்னை, அக். 4—

அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்களிடமிருந்து திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வேளாண்மைத்துறை மீண்டும் திரு. தருமலிங்கம் அவர்களிடம் தரப்பட்டது.

அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களிடம் மாற்றப்பட்டிருந்த வருவாய்த்துறை மீண்டும் திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம் தரப்பட்டது.

ஆளுநர் மாளிகை வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு இம்மாறுதல்களை அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மூன்று அமைச்சர்களின் பொறுப்புத் துறைகள் வருமாறு:—

திரு. ப. உ. சண்முகம்:—உணவு, வணிக வரிகள், வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் அமைப்புகள், துணைக் கலெக்டர்கள்.

திரு. செ. மாதவன்:—தொழில்கள், துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், தாதுப் பொருட்கள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, வேலைவாய்ப்பு, பயிற்சி, கம்பெனிகள், சட்டம், நீதிமன்றம், சிறைகள்.

திரு. அன்பில் தருமலிங்கம்:— வேளாண்மை, உணவு உற்பத்தி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சென்னை, அக். 4—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அக்டோபர் 6ந்தேதி திறக்கப்படும்.

அக்டோபர் 5-ந்தேதி மாலை முதற்கொண்டே பல்கலைக் கழக மாணவர் விடுதி திறக்கப்பட்டுவிடும்.

இத்தகவலை, பல்கலைக் கழகப் பதிவாளர் வெளியிட்டுள்ள ஒரு குறிப்பு தெரிவிக்கிறது.

தலைமைக் கழக அறிவிப்பு

கோவில்பட்டி நகர தி.மு. கழகத் தோழர்கள்மீது நடவடிக்கை

கோவில்பட்டி நகர தி. மு. கழக உறுப்பினர்களான கீழ்க்குறிப்பிட்டுள்ள தோழர்கள் அறுவரும், நகரத்தில் கழகக் கட்டுப்பாடு-ஒழுங்கு முறைகளை மீறியும், கழகத் தோழர்களிடையே பிளவு உண்டாக்கும் வகையிலும், அண்மையில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளருக்கு எதிராக மாற்றுக் கட்சி வேட்பாளருக்குப் பகிரங்கமாக ஆதரவு தந்தும் செயல்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு - உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தலைமைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, கீழ்க் குறிப்பிட்டுள்ள தோழர்கள் அறுவரும் இன்று முதல் கழகத்தின் எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகின்றனர்; இந்த அறுவர் பேரிலும் விரைவில் முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விலக்கிவைக்கப்படும் தோழர்கள் :—

1. கலைமணி எஸ். எம். காசி (பொதுக்குழு உறுப்பினர் -- நெல்லை மாவட்ட தி. மு கழக அவைத் தலைவர்)
2. ஈ. வே. அ. வள்ளிமுத்து எம்.சி. (681602)
3. ந. ஜெபச்சந்திரன் (33548)
4. செ. காசி மாரியப்பன் (347522)
5. பூ. ப. மகாலிங்கம் (86382)
6. ப. இராமசாமி (347536)

'அறிவகம்'
சென்னை-18
1—10—'71

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

காமராசர் குற்றச்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய விழாவில்தான் காமராசர், 'தியாகிகள் பெயரை வைப்பது ஏன்' என்று கேட்டிருக்கிறார்!

தோற்றுப்போயிருக்கின்ற சோர்வில் அவர் அப்படிப்பேசியிருக்கலாம்; ஆனால் அவர் மேடையில் நின்று பேசிய இடத்தின் பெயரே கண்ணப்பர் திடல் என்பதாகும்; கண்ணப்பர் என்றால் கண்ணப்ப நாயனார் அல்லர்; கண்ணப்பர் என்கிற காங்கிரசு ஊழியரின் பெயரால் அமைந்த திடலாகும்; அவர் அதை மறந்துவிட்டுப்பேசியது தான் விசித்திரமாகும்!

அவருடையவும்--அவர் போன்றவர்களின் பெயராலும் உள்ள மின் நிலையங்கள்--மதகுகள்--பூங்காக்களையெல்லாம் அவர் நினைவுபடுத்திக் கொள்வது அவசியமாகும்."

நடக்க இருப்பவை

6--10--71

சென்னை 5-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வண்ணை சோலையப்பன் தெரு மண்டபம் அருகில்; தலைவர்: க. ஆறுமுகம்; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி, திருப்பத்தூர் இராமசாமி, பி. ஆர். இலட்சுமிகாந்தன், இரகுமான்கான், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், கே. எம். கண்ணபிரான் எம்.சி, மற்றும் பலர்.

விருந்துபசாரங்கள்

ஆந்திர அமைச்சரவை முடிவு

ஐதராபாத், அக். 4—

"பாராட்டு -- விருந்துபசாரங்களை ஏற்பதில்லை" என்று புதிய ஆந்திர அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

அமைச்சரவையின் முதற்கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருப்பதாக முதலமைச்சர் பி. வி. நரசிமமராவ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தவிர, அமைச்சர்கள் எந்தக் கிராமத்துக்குப் போனாலும், தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்குப் போய் பார்வையிட வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குற்றத் தடுப்பு தேசிய வாரம்

(2-ம பக்கத் தொடர்ச்சி)

அக்டோபர் 16-ந் தேதியன்று நடைபெறும் நிறைவு விழாக் கூட்டத்துக்கு கவர்னர் கே. கே. ஷா தலைமைவகிப்பார்.

விழாக் கொண்டாட்டத்தையொட்டி நடத்தப்படும் கட்டுரை -- பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குச் சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பரிசுகளை வழங்குவார்.

போலீசுத் துறையின் பல்வேறு பிரிவுகளின் பணிகளை விவரிக்கும் பொருட்காட்சி ஒன்றும் நடத்தப்படும்.

அக்டோபர் 12-ந் தேதி 'சாலை விபத்துத் தடுப்பு' நாளாகவும், அக்டோபர் 14-ந தேதி 'சமூக விரோதச் சக்திகளிடமிருந்து பாதுகாப்பு' நாளாகவும் கொண்டாடப்படும்.

தலைமைக் கழக அறிவிப்பு

புதுவை நகராட்சி

தி. மு. க. உறுப்பினர்கள் விலகல் செய்திக்கு மறுப்பு

புதுவை நகராட்சியிலிருந்து துணை மேயர்களில் ஒருவரான திரு. இலட்சுமணசாமி உடையார் மற்றும் ஐந்து நகராட்சி உறுப்பினர்களும் – ஆக ஆறு தி.மு.க. உறுப்பினர்கள் கழகத்திலிருந்து விலகியதாகச் சில பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு பேர்களில் திரு. கோவிந்தராஜ், திரு. சைமன் ஆகிய இருவர் மட்டும் கழக உறுப்பினர்கள்; மற்ற நால்வருக்கும் – கழகத்துக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது; அதுமட்டுமல்லாமல், கடந்த புதுவைப் பொதுத்தேர்தலில் கழக வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்ட அணியைச் சார்ந்தவர்கள் இவர்கள்.

புதுவை நகராட்சி, கூட்டணி சார்பிலேயே இயங்கிவருகிறது. மற்றொரு துணை மேயர் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த திருமதி சரசுவதி சுப்பையா அவர்களாவார்.

திரு. கோவிந்தராஜ், திரு. சைமன் ஆகியோர் விலகியதாக வந்துள்ள செய்தி குறித்து முழு விவரம் அறிவிக்குமாறு புதுவை மாவட்ட தி. மு. க. நிர்வாகிகளிடம் தலைமைக் கழகம் கேட்டிருக்கிறது.

ஆகவே, 'புதுவை நகராட்சியிலிருந்து ஆறு தி. மு. க. உறுப்பினர்கள் விலகினார்கள்' என்ற செய்தி வேண்டுமென்றே மிகைப்படுத்தப்பட்டதாகும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அறிவகம்' சென்னை—18
3—10—1971

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க. (அமைப்பு)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] (24, [illegible]) [illegible]